**<u>சாதாரண கூட்டம்</u>**

**கூத்தாநல்லூர் நகராட்சியின் 2023ம் ஆண்டு** பிப்ரவரி மாதம் 27 **நாள்** திங்கட்கிழமை காலை 11.000 **மணிக்கு நடைபெற்ற** சாதாரணக் **கூட்ட நடவடிக்கைகள்**

| மன்றக்கூட்டம் நடைபெற்ற நாள் | வரிசை எண் மற்றும் மன்ற கூட்டப்பொருள் | மன்றத்தின் தீர்மானம் |
|---|---|---|
| 27.02.2023 | **பொருள் எண் 1**<br>நகராட்சி பொறியாளர் (ஆணையர் மு.கூ.பொ) அவர்களது ஜனவரி 2022 மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது<br>அலுவலக குறிப்பு :- பதிவு செய்யலாம் (ந.க.எண். 2105/2011/சி1) | **தீர்மானம் எண்:- 160 அனுமதிக்கப்பட்டது** |
| 27.02.2023 | **பொருள் எண் 2**<br>இந்நகராட்சி பகுதியில் திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்காக தூய்மை பணியாளர்களை வழங்கி வரும் ஒப்பந்த நிறுவனததின் அனுமதி காலம் 31.01.2023 உடன் முடிவடைய உள்ளது. இந்நிலையில் நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் 10.01.2023ந் தேதிய உத்தரவு ந.க.எண். 35295/2022/இஎ2-SWM 6 ல் 3 வருட காலத்திற்கு 01.04.2023 முதல் 31.03.2026 வரை புதிய ஒப்பந்தம் கோருவதற்கு அனுமதி வரப்பட்டுள்ளது. எனவே புதிய ஒப்பந்தபுள்ளி கோரி பணி மேற்கொள்ள 2 மாத காலமாகும். அதுவரை திடக்கழிவு மேலாண்மை பணிகளை மேற்கொள்ள ஏற்கனவே பணி பார்த்து வரும் ஒப்பந்த நிறுவனமான தீ-கரன் சமூக தொண்டு நிறுவனத்திற்கு 01.02.2023 முதல் 31.03.2023 வரை 2 மாத காலத்திற்கு மட்டும் பழைய ஒப்பந்தபுள்ளி விகிதத்திலேயே பணியினை நீடித்து வழங்க ஆகும் உத்தேச செலவின தொகை ரூ.19.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு<br>1.. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. அவசர அவசியம் கருதி நகர் மன்ற தலைவர் அவர்களிடம் 31.01.2023 அன்று முன் அனுமதி பெற்றதை மன்றம் ஏற்கலாம்.<br>(ந.க.எண். 445/2019/எச்1) | **தீர்மானம் எண்:- 161 அனுமதிக்கப்பட்டது** |

| | | |
|---|---|---|
| 27.02.2023 | **பொருள் எண் 3**<br>இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் இயங்கி வரும் BOV வாகனங்களுக்கு ஒரு வருட காலத்திற்கு பராமரிக்கும் பழுது பார்க்கும் பணிக்கு இந்நகர் மன்ற தீர்மான எண் 1017 நாள் 24.01.2022ல் அனுமதி பெறப்பட்டு தற்போது வரை பணி பார்க்கப்பட்டு வருகிறது. தறபோது புதியதாக கோரப்பட்டுள்ள திடக்கழிவு மேலாண்மை தனியார் ஒப்பந்தபுள்ளியில் வாகனங்களை 01.04.2023 முதல் வாடகைக்கு நல்லமுறையில் வழங்கப்படவேண்டும். எனவே தற்போது 31.03.2023 வரை மேற்படி வாகனங்களை பராமரிக்கவும் பழுது நீக்கவும் கூடுதல் செலவினத் தொகை ரூ.2,00,000 மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம் (ந.க.எண். 664/2020/எச்1) | **தீர்மானம் எண்:- 162**<br>**அனுமதிக்கப்பட்டது** |
| 27.02.2023 | **பொருள் எண் 4**<br>இந்நகராட்சி பகுதியில் டெங்கு தடுப்பு பணிகளுக்காக பணியாளர்களை வழங்கி வரும் ஒப்பந்த நிறுவனததின் அனுமதி காலம் 31.01.2023 உடன் முடிவடைய உள்ளது. நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் 28.11.2017ந் தேதிய கடித ந.க.எண். 2571/2017/ஜெ1 ன்படி டெங்கு தடுப்பு பணிகள் தொடர்ந்து பார்க்கப்பட வேண்டி உள்ளதால் மேற்படி நிறுவனத்தின் ஒப்பந்த காலத்தினை 01.02.2023 முதல் 30.04.2023 வரை நீடிப்பதற்கும் அதற்காகும் உத்தேச செலவின தொகை ரூ.15.00 இலட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. அவசர அவசியம் கருதி நகர் மன்ற தலைவர் அவர்களிடம் 31.01.2023 அன்று முன் அனுமதி பெற்றதை மன்றம் ஏற்கலாம்.<br>(ந.க.எண். 484/2020/எச்1) | **தீர்மானம் எண்:- 163**<br>**அனுமதிக்கப்பட்டது** |

27.02.2023

**பொருள் எண் 5**

இந்நகராட்சி அலுவலகத்தில் இயங்கி வந்த TN 50 U – 2453 என்ற எண் உள்ள பழைய ஈப்பு வாகனத்தை ஏலம் விடும் பணிக்கு 15.02.2023 அன்று கலந்து கொண்டு ஏலம் கோரப்பட்ட விபரம் கீழ்கண்டவாறு

| வ. எண் | கலந்து கொண்டவர்களின் பெயர் | குறைந்தபட்ச ஏலத்தொகை (ரூ) | கோரப்பட்ட ஏலத்தொகை (ரூ) |
|---|---|---|---|
| 1 | சு,முருகாணந்தம் , 18ஏ மேல்கொண்டாழி தெற்கு தெரு | 1,10,000 | 1,13,000 |
| 2 | பா. சுரேஷ், 51 மேல்கொண்டாழி தெற்கு தெரு | | 1,12,500 |
| 3 | மு. ஆடலரசன்<br>27, தெற்கு தெரு மரக்கடை | | 1,10,500 |
| 4 | எம்.கே. அன்வர் அலி<br>12 0/ஏ, சின்னப்பள்ளி தெரு கூத்தாநல்லூர் | | 1,12,000 |

மேற்கண்டவாறு ஏலத்தொகைகள் கோரப்பட்டதில் வரிசை எண் 1ல் உள்ள சு.முருகாணந்தம் என்பவரின் ஏலத்தொகை அதிகமாக உள்ளதை .மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. அதிகமான ஏலத்தொகையினை மன்றம் ஏற்கலாம்
2. அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் முன் அனுமதி பெற்றதை மன்றம் ஏற்கலாம்.

(ந.க.எண்.2370/2011/இ1)

**தீர்மானம் எண்:- 164**

**அனுமதிக்கப்பட்டது**

<table>
<tr>
<td>27.02.2023</td>
<td>

பொருள் எண் 6

இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் இயங்கி வரும் TN 50 X 2638 TATA ACE வாகனத்திற்கு பழுது நீக்கம் பணிக்கு தகுதி சான்று பெறுவதறகு இந்நகர் மன்ற தீர்மான எண் 35 நாள் 28.045.2022 அனுமதி பெறப்பட்டு 16.02.2023 அன்று கோரப்பட்ட ஒப்பந்தபுள்ளிகள் கீழ்கண்ட நிறுவனங்களிடமிருந்து வரப்பெற்றுள்ளது.

<table>
<tr><th>வ. எண்</th><th>நிறுவனத்தின் பெயர்</th><th>மதிப்பீடு தொகை (ரூபாயில்)</th><th>ஒப்பந்ததாரரால் குறிப்பிடப்பட்ட தொகை (ரூபாயில்)</th></tr>
<tr><td>1</td><td>ஆனந்தராஜ் ஆட்டோ டீசல் ஒர்க்ஸ், மன்னார்குடி</td><td rowspan="2">60,000/-</td><td>59,992/-</td></tr>
<tr><td>2</td><td>கணபதி ஆட்டோ டீசல் ஒர்க்ஸ் மன்னார்குடி</td><td>65,430/-</td></tr>
</table>

மேற்கண்டவாறு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தபுள்ளிகளில் வரிசை எண் 1ல் உள்ள ஆனந்தராஜ் ஆட்டோ ஒர்க்ஸ் மன்னார்குடி நிறுவனத்திடமிருந்ருது வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளி குறைவாக உள்ளது. எனவே மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. குறைவான ஒப்பந்தபுள்ளியினை மன்றம் ஏற்கலாம
2. அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களிடம் முன் அனுமதி பெற்றதை மன்றம் ஏற்கலாம்.

(ந.க.எண். 523/2020/எச்10

</td>
<td>தீர்மானம் எண்:- 165<br>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

<table>
<tr>
<td>27.02.2023</td>
<td>
பொருள் எண் 7<br>
இந்நகராட்சிக்குட்பட்ட அனைத்து வார்டுகளிலும் பொது குடிநீர் குழாய் சீரமைக்கும் பணிகள் மேற்கொள்வதற்கு 09.02.2023 அன்று கோரப்பட்ட ஒப்பந்தபுள்ளியில் கீழ்கண்டவாறு இரண்டு ஒப்பந்தபுள்ளிகள் வரப்பெற்றுள்ளது.
<table>
<tr><th>வ. எண்</th><th>நிறுவனத்தின் பெயர்</th><th>ஒப்பந்த தொகை</th><th>ஒப்பந்தபுள்ளி தொகை</th><th>சதவிகிதம்</th></tr>
<tr><td>1</td><td>திருமதி.ஜெகபர்நாச்சியா ஜெகபர் அலி ஒப்பந்ததாரர் கூத்தாநல்லூர்</td><td>244367</td><td>244337</td><td>0.01% மதிப்பீட்டைவிட குறைவு</td></tr>
<tr><td>2</td><td>திரு.ஜி.கலியமூர்த்தி ஒப்பந்ததாரர் கீழவாழாச்சேரி</td><td>244367</td><td>244413</td><td>0.02% மதிப்பீட்டைவிட அதிகம்</td></tr>
</table>
மேற்கண்டவாறு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தபுள்ளிகளில் வரிசை எண் 1ல் உள்ள திருமதி.ஜெகபர்நாச்சியா ஜெகபர் அலி ஒப்பந்ததாரர் கூத்தாநல்லூர் என்ற ஒப்பந்ததாரரிடமிருந்து வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளி தொகை மதிப்பீட்டினை விட 0.01% குறைவாக உள்ளது. மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.<br>
அலுவலக குறிப்பு<br>
1. குறைவான ஒப்பந்தபுள்ளியினை மன்றம் ஏற்கலாம்.<br>
2. அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களிடம் முன் அனுமதி பெற்றதை மன்றம் ஏற்கலாம்...<br>
(ந.க.எண்.777/2022/இ1)
</td>
<td>தீர்மானம் எண்:- 166<br>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td>27.02.2023</td>
<td>
பொருள் எண் 8<br>
கூத்தாநல்லூர் நகராட்சிக்குட்பட்ட 15வது வாடு மேலத்தெருவில் நகர்மன்ற தலைவர் மற்றும் நகர்மன்ற உறுப்பினர்கள் கேட்டுக் கொண்டதற்கினங்க Culvert (சிறுபாலம்) அமைக்கும் பணி மேற்கொள்வதறகு தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பு ரூ. 2.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>
அலுவலக குறிப்பு<br>
1. மன்றம் அனுமதிக்கலாம் (ந.க.எண் /2023/இ1)
</td>
<td>தீர்மானம் எண்:- 167<br>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

27.02.2023

**பொருள் எண் 9**

**இந்நகராட்சி அலுவலக கட்டிடம் வெளிப்புறம் மற்றும் உட்புறம் வர்ணப்பூச்சு பொரிந்துள்ளதால் புதிதாக வர்ணம் அடிக்கவும், கழிவறைகள் மற்றும் கதவுகள் பராமரிப்பு பணி செய்வதற்கும், புதிதாக கொடி மேடை அமைப்பதற்கும் ஆகும் உத்தேச மதிப்பீடு ரூ.4.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.**

**அலுவலக குறிப்பு**

1. **மன்றம் அனுமதிக்கலாம்**
2. **பொதுநிதியின் கீழ் மேற்கொள்ளலாம்** **(ந.க.எண். /2023/இ1)**

**தீர்மானம் எண்:- 168 அனுமதிக்கப்பட்டது**

---

27.02.2023

**பொருள் எண் 10**

SuWasem திட்டத்தின் கீழ் இந்நகராட்சிக்குட்பட்ட 12 ஆழ்துளை கிணறுகளில் மழைநீர் சேகரிப்பு அமைக்கும் பணிக்கு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் சென்னை அவர்களிடமிருந்து 12.10.2022 நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது. எனவே மேற்படி பணிக்கு 09.02.2023 அன்று கோரப்பட்ட ஒப்பந்தபுள்ளியில் கீழ்கண்டவாறு இரண்டு ஒப்பந்தபுள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| **வ. எண்** | **நிறுவனத்தின் பெயர்** | **ஒப்பந்த தொகை** | **ஒப்பந்தபுள்ளி தொகை** | **சதவிகிதம்** |
|---|---|---|---|---|
| 1 | திருமதி.ஜெகபர்நாச்சியா ஜெகபர் அலி ஒப்பந்ததாரர் கூத்தாநல்லூர் | 195691 | 195664 | 0.01% மதிப்பீட்டைவிட குறைவு |
| 2 | திரு.ஜி.கலியமூர்த்தி ஒப்பந்ததாரர் கீழவாழாச்சேரி | 195691 | 196516 | 0.42% மதிப்பீட்டைவிட அதிகம் |

மேற்கண்டவாறு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தபுள்ளிகளில் வரிசை எண் 1ல் உள்ள திருமதி.ஜெகபர்நாச்சியா ஜெகபர்அலி ஒப்பந்ததாரர் கூத்தாநல்லூர் என்ற ஒப்பந்ததாரரிடமிருந்து வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளி தொகை மதிப்பீட்டினை விட 0.01% குறைவாக உள்ளது. மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. குறைவான ஒப்பந்தபுள்ளியினை மன்றம் ஏற்கலாம்.
2. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் சென்னை அவர்களிடமிருந்து 12.10.2022 நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளதை மன்றம் ஏற்கலாம்.
3. அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களிடம் முன் அனுமதி பெற்றதை மன்றம் ஏற்கலாம்.

(ந.க.எண்.360/2022/இ1)

**தீர்மானம் எண்:- 169 அனுமதிக்கப்பட்டது**

27.02.2023

**பொருள் எண் 11**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் சுடுகாடு சுத்தம் செய்தல், கருவேல மரங்கள் சுத்தம் செய்தல், குனுக்கடி கம்போஸ்ட் சுத்தம் செய்தல், ஆற்றங்கரை சுத்தம் செய்தல் போன்ற அவசர அத்தியாவசிய பணிகளை மேற்கொள்ள ஒரு JCB இயந்திரம். வாடகைகு வழங்கும் பணிக்கு 16.02.2023 அன்று கோரப்பட்ட ஒப்பந்தபுள்ளியில் இரண்டு நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்தபுள்ளி வரப்பெற்றுள்ளது. .

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் | ஒப்பந்ததாரரால் குறிப்பிடப்பட்ட தொகை (ரூபாயில்) ஒரு மணி நேரத்திற்கு வாடகை |
|---|---|---|
| 1 | சாய்ராம் ஸ்ரீ ஆண்டாள் டிரான்ஸ்போர்ட் மற்றும் எர்த் மூவர்ஸ் | 1150/- |
| 2 | DK எர்த் மூவர்ஸ் மரக்கடை | 1300/- |

மேற்கண்டவாறு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தபுள்ளிகளில் வரிசை எண் 1ல் உள்ள சாய்ராம் ஸ்ரீ ஆண்டாள் டிரான்ஸ்போர்ட் மற்றும் எர்த் மூவர்ஸ் என்ற நிறுவனத்திடமிருந்து வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளி குறைவாக உள்ளது. எனவே மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. குறைவான ஒப்பந்தபுள்ளியினை மன்றம் ஏற்கலாம்.
2. அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களிடம் முன் அனுமதி பெற்றதை மன்றம் ஏற்கலாம்.

(ந.க.எண்.1553/2022/எச்1)

**தீர்மானம் எண்:- 170**

**அனுமதிக்கப்பட்டது**

| | | |
|---|---|---|
| 27.02.2023 | பொருள் எண் 12<br>ஆதி திராவிடர் நலம், ஆதி திராவிடர்/பழங்குடியினர் மற்றும் மதம் மாறிய கிருஸ்துவ ஆதி திராவிடர் இறந்தால் இறந்தவரின் ஈமச்சடங்கிற்காக இறந்தவர் குடும்பத்திற்கு மானியம் வழங்கும் திட்டத்தின் கீழ் ஈமச்சடங்கு தொகை ஒதுக்கீடு செய்ய கோரி நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. தற்போது வருவாய் நிதியிலிருந்து ஈமச்சடங்கிற்கான உத்தேச செலவினத் தொகை ரூ.2,00,000/- மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. அரசு நிதி வழங்கும் வரை மேற்படி செலவினத் தொகையினை நகராட்சி நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு<br>1. மன்றம் ஏற்கலாம்<br>2. அரசு நிதி வழங்கும் வரை மேற்படி செலவினத் தொகையினை நகராட்சி நிதியிலிருந்து செலவு செய்து கொள்ள அனுமதிக்கப்படுகிறது.<br>e.க.எண். 1709/2023/எச்1) | தீர்மானம் எண்:- 171<br>அனுமதிக்கப்பட்டது |

ஒம்/ திருமதி. மு.பாத்திமா பஷீரா
நகர்மன்ற தலைவர்
கூத்தாநல்லூர் நகராட்சி

/ உண்மை நகல் உத்தரவின்படி/

ஆணையர்
கூத்தாநல்லூர் நகராட்சி